சுருக்கம்

தொழிற்தகராறுகள் – நிர்வாகம், பிரிக்கால் லிமிடெட், கோயம்புத்தூர் – எதிர் – கோவை மாவட்ட பிரிக்கால் தொழிலாளர்கள் ஒற்றுமைச் சங்கம், கோயம்புத்தூர் – 25.04.2017 சங்க பொது வேலை நிறுத்தம் செய்தது – 8 நாட்கள் சம்பளப் பிடித்தம் செய்தது – சமரசமுறிவறிக்கை – தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்காக அனுப்புதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (டி1) துறை

அரசாணை (டி) எண்.383

நாள்: 05.07.2017
ஹேவிளம்பி – ஆனி 21
திருவள்ளுவர் ஆண்டு 2048
படிக்கப்பட்டது:-

1. கோவை, தொழிலாளர் துணை ஆணையரின் சமரச முறிவறிக்கை மற்றும் மந்தண அறிக்கை எண்.ஆ2/2499/2017, நாள். 03.07.2017.
2. தொழிலாளர் ஆணையரின் கடித எண். ந.க.எண். அ4/26245/2017, நாள். 04.07.2017.

----------

**ஆணை:**

கீழ்க்காணும் அறிவிக்கை தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும்:-

அறிவிக்கை

இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பொருள் தொடர்பாக பிரிக்கால் லிமிடெட், கோயம்புத்தூர் என்ற நிர்வாகத்திற்கும் கோவை மாவட்ட பிரிக்கால் தொழிலாளர்கள் ஒற்றுமைச் சங்கம், கோயம்புத்தூர் என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

1947-ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தகராறு, கோயம்புத்தூர் தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

(த.பி.பா)

Scanned by CamScanner

மேலும், 1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் 10 (2ஏ) பிரிவின் கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு கோயம்புத்தூர் தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பெ.அமுதா
அரசு செயலாளர்

பெறுநர்

தொழிலாளர் நீதிமன்றம், கோயம்புத்தூர்–641 018.

பணி மேலாளர்,
அரசு மைய அச்சகம், சென்னை–79.
(தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படுவதற்காக)

நிர்வாகம்,
பிரிக்கால் லிமிடெட்,
பிளாண்ட்–1, 3,
கோயம்புத்தூர் –641 020.

பொதுச் செயலாளர்,
கோவை மாவட்ட பிரிக்கால் தொழிலாளர்கள் ஒற்றுமைச் சங்கம்,
126–சி, ஈஸ்வரன் கோயில்தெரு,
பிரிக்கால் கூட்டுறவு பண்டகசாலை எதிர்புறம்,
பெரியநாயக்கன்பாளையம்,
கோயம்புத்தூர்–641 020.

நகல்

தொழிலாளர் ஆணையர், சென்னை–600 006.
தொழிலாளர் துணை ஆணையர், கோயம்புத்தூர்–18 .
மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின்
முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–600 009.
செயலாளரின் தனிச்செயலர்,
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை–600 009.
துணைச் செயலரின் நேர்முக உதவியாளர்,
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை–600 009.
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (அ.நமு.II-2,)துறை,
சென்னை–600 009. (2நகல்கள்)
சுத்த நகல்
இருப்பு கோப்பு ( கோ.எண். 8528/டி1/2017) .

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

Scanned by CamScanner

**இணைப்பு**

**அரசாணை (டி) எண்.383, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (டி1) துறை நாள்.05.07.2017)**

**எழுவினா**

**கோரிக்கை எண்1.**

25.04.2017 அன்று ஒரு நாள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டதற்காக தொழிலாளர்களின் '8 நாட்கள் சம்பளத்தை பிரிக்கால் லிமிடெட் பிளான்ட்–1 மற்றும் பிளான்ட்–3 நிர்வாகங்கள் பிடித்தம் செய்துள்ளது நியாயமானது தானா ?

இல்லையெனில் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய நிவாரணம் என்ன ?

**கோரிக்கை எண்2.**

எழுவினா–1ன் இறுதி தீர்ப்பிற்கு உட்பட்டு 8 நாட்கள் சம்பளத்தை பிரிக்கால் லிமிடெட், பிளான்ட்–1 மற்றும் பிளான்ட்–3 நிர்வாகங்கள் தொழிலாளர்களுக்கு முன்பணமாக வழங்க இடைக்காலத் தீர்வம் (INTERIM AWARD) பிறப்பிக்க வேண்டுமென்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா ?

ஆம் எனில் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய நிவாரணம் என்ன ?

பெ.அமுதா
அரசு செயலாளர்

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்

Scanned by CamScanner